சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.4**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | குருமூர்த்தி | கிராமம் : | |
| த/பெ : | மாணிக்கவாசகம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் திருச்சி தாராநல்லூரில் குடியிருந்து நகை கடையில் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு திருச்சியை சேர்ந்த பாப்பம்மாளை தெரியும். அவர் அரிசி வியாபாரம் செய்துவந்தார். அவர் உயில் எழுதி வைத்திருந்தார். அவர் எழுதி வைத்த உயிலில் நான் சாட்சி கையொப்பம் செய்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-5-ல் உயிலில் உள்ள இரண்டாவது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி உயிலில் என்னை தவிர வேறு நபரும் சாட்சி கையெழுத்து செய்தார். மேற்படி பி.வா.சா.ஆ-5ல் இன்னார் என்று நிரூபித்தார் என்கின்ற பகுதியிலும் கையெழுத்து செய்தேன். மேற்படி பி.வா.சா.ஆ.5ல் பாப்பம்மாள் கையெழுத்து செய்தார் , கைரேகையும் வைத்தார். மேற்படி பாப்பம்மாள் கையெழுத்து செய்ததை நான் நேரடியாக பார்த்தேன். நான் கையெழுத்து செய்ததை மேற்படி பாப்பம்மாள் பார்த்தார். மற்றொரு சாட்சி கையெழுத்து செய்ததை பாப்பம்மாள் பார்த்தார். மேற்படி பாப்பம்மாள் கையெழுத்து செய்ததை மற்றொரு சாட்சியும் பார்த்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-5ல் பாப்பம்மாள் கையெழுத்து உள்ளது. பி.வா.சா.ஆ-5ல் உள்ள பாப்பம்மாள் புகைப்படம் மற்றும் கைரேகை உள்ளது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ-5 உயிலானது எந்த ஆண்டு எழுதப்பட்டது என்றால் 2019ம் ஆண்டு எழுதப்பட்டது, தேதி, மாதம் தெரியாது. எந்த சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.5 ஆவணம் எழுதப்பட்டது என்றால் கடை என்று சொன்னார்கள். பாப்பம்மாள் உயில் எழுதுவதற்கு முன்னர் சொத்து சம்பந்தமான ஆவணங்கள் எதனையும் காண்பிக்கவில்லை. பி.வா.சா.ஆ-5ல் கண்டுள்ள சரத்துக்களை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் சாட்சியாக வேறு யாரு கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ-5 ஆவணத்தை யார் தயாரித்தார்கள் என்று தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ-5 வீட்டில் வைத்து

கையெழுத்து செய்தேனா என்றால் பத்திர அலுவலகத்தில் வைத்து போட்டேன். பாப்பம்மாள் கையெழுத்து போட்டாரா இல்லை ரேகை வைத்தாரா என்றால் எல்லாம் பக்கங்களிலும் கையெழுத்தும் போட்டார் ரேகையும் வைத்தார். பாப்பம்மாள் வீடு தெரியுமா என்றால் தெரியும் முருகன் தியோட்டருக்கு எதிரில் 4,5 வீடுகள் தள்ளி உள்ளது. மேற்படி எனது வீட்டிற்கும் பாப்பம்மாள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3/4 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. எனக்கும், பாப்பம்மாளுக்கும் வரவு, செலவு உண்டு.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.